நெல்லை மாலை முரசு

# ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

2012





# ராகு–கேது பெயர்ச்சி பலன்கள்

**(2-12-2012 முதல் 22-6-2014 வரை)**

**ஜோ**திட சாஸ்திரத்தில் ராகுவிற்கு "விஞ்ஞான" ராகு என்றும், கேதுவிற்கு மெய்ஞான" கேது என்றும் கூறுவார்கள்.

நிழல் கிரகம் சாயகிரகம் என்று ராகு கேதுவிற்கு பெயர் உண்டு. "சாய" என்றால் வடமொழி சொல். தமிழில் இதற்கு நிழல் என்று பொருள்.



ராகுவும், கேதுவும் ஓர் ராசியில் சரியாக 1½ ஆண்டு காலம் இருப்பார்கள். இவை சாய கிரகமாக இருப்பதால் வக்கிர நிலை அடைவதில்லை.

ராகு, கேது பூமி என்றும் கூறலாம். ராகு கேது பூமியில் இருந்து சுமார் 2½ லட்சம் மைல் தொலைவில் உள்ளது.

சூரியனின் ஒளி பூமி மீது வரும் பொழுது அதற்கு எதிர் திசையில் நீளமாக செல்லும் பூமியின் நிழலே ராகு கேது ஆகும்.

ராகு கேது இரண்டும் எதிர்மறையான கிரகங்கள் ஆகும். ராகு தென் துருவத்தில் இருந்தால் கேது அதற்கு நேர் வட துருவத்தில் இருக்கும்.

ராகு இருக்கும் ராசியில் இருந்து எப்பொழுதும் கேது 7–வது ராசியில் இருக்கும். ராகு, கேது 180 டிகிரியில் இருக்கும்.

எல்லா கிரகங்களும் ராசி மண்டலத்தை வலது பக்க முறையில் சுற்றும். ஆனால் ராகு கேது மட்டும் இதற்கு எதிர் மறையாக இடது பக்க சுழற்சி முறையில் ராசி மண்டலத்தை சுற்றும்.

ராகு சனி கிரகத்தின் பலன் தருபவர்.

கேது செவ்வாய் கிரகத்தை போன்று பலன் தருபவர்.

கணித்தவர்:-
**ஜோதிடர் நெல்லை சங்கர சுப்பிரமணியன்**

